2004 ஜூலை 27]

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஆம். கோபிசெட்டிப்பாளையம் தொகுதியில் கூகலூர் பேரூராட்சியில், கூகலூர் ஆரம்ப சுகாதார நிலையம் 30 படுக்கைகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 28, திரு. மா. இராஜசேகர், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.*

28—

பெண்கள் முன்னேற்றத் திட்டம்

***7376—திரு. மா. இராஜசேகர்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராஜபாளையம் பெண்கள் முன்னேற்றத்திற்காகப் புதியதாகத் திட்டம் ஏதும் தொடங்கப்படுமா?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

தாயுள்ளமும், கருணையுள்ளமும் கொண்ட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழ்நாட்டிலுள்ள அனைத்துப் பெண்களின் முன்னேற்றத்திற்காக சுய உதவிக் குழுக்களின் வாயிலாக பல செயல் திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறார்கள். எனவே, இராஜபாளையம் பெண்கள் முன்னேற்றத்திற்காக என்று மட்டும் புதியதாகத் திட்டம் எதுவும் தொடங்கவேண்டியதில்லை. மாநிலம் முழுமைக்கும் புதிய திட்டங்கள் தொடங்கப்படும்போது, அத்திட்டங்களின் பயன்கள் இராஜபாளையம் பெண்களுக்கும் பொருந்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மா. இராஜசேகர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது இராஜபாளையம் சட்டமன்றத் தொகுதியில் எத்தனை மகளிர் சுய உதவிக் குழுக்கள் இயங்குகின்றன என்பதனைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே அறிய விரும்புகிறேன்.*

முற்பகல் 10–15

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராஜபாளையம் நகராட்சியில் உள்ள பெண்கள் சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை 666. மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 12207. குழுக்களின் மொத்த சேமிப்புத் தொகை ரூ.187.76 இலட்சம். கடன் வசதி பெறத் தயார் நிலையில் உள்ள மகளிர் குழுக்களின் எண்ணிக்கை 508. வங்கிக் கடன் பெற்ற குழுக்களின் எண்ணிக்கை 171. வழங்கப்பட்ட கடன் தொகை ரூ.204.58 இலட்சம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மா. இராஜசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் மாவட்டத்தில் எத்தனை மகளிர் சுய உதவி குழுக்கள் இயங்குகின்றன என்பதனைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நமது அமைச்சருக்கு பரீட்சை வைக்கின்ற மாதிரி தெரிகிறது. (சிரிப்பு)

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் மாவட்டத்தில் செயல்படும் மொத்த சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை 1,927; மொத்த மகளிர் எண்ணிக்கை 87,845; குழுக்கள் சேமித்துள்ள தொகை ரூபாய் 13,95,71,000; கடன் வழங்கப்பட்ட தொகை ரூபாய் 19,59,57,000 என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பரீட்சையில் பாசாகிவிட்டீர்கள். வினா எண் 29, திரு. வெ. ஏழுமலை, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

29—

கொத்தடிமைத் தொழிலாளர்

***7931—திரு. வெ. ஏழுமலை:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் கொத்தடிமைத் தொழிலாளர் முறை முற்றிலும் ஒழிக்கப்பட்டு விட்டதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS